ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1867/1 - 2014 ජුනි මස 16 වැනි සඳුදා - 2014.06.16

*1867/1 ஆம் இலக்கம் – 2014 ஆம் ஆண்டு யூன் மாதம் 16 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### ஊவா மாகாண மாகாண சபை

*2011 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, ஊவா மாகாண மாகாண சபையின் உள்ளூராட்சிமன்றங்களின் நிர்வாகம் மற்றும் மேற்பார்வைக்கான அதிகாரம் பற்றிய நியதிச் சட்டத்தின் 2 (3) (ஆ) உப பிரிவின் கீழ் விதிக்கப்படும் அறிவித்தல்*

*2013, சனவரி மாதம் 16 ஆந் திகதி புதன்கிழமை 1793/6 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பதுளை மாவட்டத்தில் வெலிமடை பிரதேச சபையின் கடமைகளை இடைநிறுத்துவது பற்றிய அறிவித்தல் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.*

*02. 2011 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, ஊவா மாகாண மாகாண சபையின் உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகம் மற்றும் மேற்பார்வைக்கான அதிகாரம் பற்றிய நியதிச் சட்டத்தில் 2 (3) (ஆ) ஆம் உப பிரிவின் கீழ் ஊவா மாகாணத்தின் முதலமைச்சர் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல், சட்டம் மற்றும் சமாதானம், கல்வி, உள்ளூராட்சி, கலாசார விவகாரங்கள், போக்குவரத்து, காணிகள், நீர்ப்பாசனத்துறை, பொருளாதார மேம்பாடுகள், கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரான சஷீந்திர ராஜபக்ஷ ஆகிய எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் வெலிமடை பிரதேச சபை 2014, யூன் மாதம் 16 ஆந் திகதி முதல் மீள் ஸ்தாபிக்கப்படுகின்றது.*

*03. அதேபோன்று, 2013, ஓகத்து மாதம் 07 ஆந் திகதி புதன்கிழமை 1822/21 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியின் மூலம் வெலிமடை பிரதேச சபையின் அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்காகவும், அதன் கடமையாற்றல் தொடர்பாகவும் நியமிக்கப்பட்ட பதுளை மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளரான ரத்நாயக்க முதியன்சேலாகே ஜயவர்தன அவர்களுடைய நியமனம், 2014, யூன் மாதம் 16 ஆந் திகதியுடன் இரத்துச் செய்யப்படுகின்றது.*

சஷீந்திர ராஜபக்ஷ,
ஊவா மாகாணத்தின் முதலமைச்சர் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல்,
சட்டம் மற்றும் சமாதானம், கல்வி, உள்ளூராட்சி, கலாசார விவகாரங்கள்,
போக்குவரத்து, காணிகள், நீர்ப்பாசனத்துறை, பொருளாதார மேம்பாடுகள், கிராமிய
உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர்.

*6-769*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.



**கவனிக்க.**- *1866/1 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானித் தொடரின் இறுதி இல.1866/43 ஆகும்.*

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*